இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை (இரண்டாம் அரையாண்டு) – **2006/2007**

**ESP 1205 -** ஒப்பீட்டுக்கல்வியும் கல்விப்பிரச்சினைகளும்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 11.11.2007 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

01. பண்டைய இலங்கையின் சுதேசிய கல்வி முறைமையில் மூன்று தனித்துவமான மட்டங்களைப் பெயரிடுக.

02. கோல்புறூக் ஆணைக்குழுவின் விதந்துரைகளின் செல்வாக்கிற்கு உட்பட்ட மூன்று கல்வி அபிவிருத்திகளைக் குறிப்பிடுக.

03. 1960களில் ஆசிரியர் கல்வியில் ஏற்பட்ட மூன்று பிரதான மாற்றங்களை சுருக்கமாக விளக்குக.

04. (i) 1948இல் தென்னாபிரிக்காவில் வெள்ளையரின் மேலாண்மை தொடர்ச்சியாக பேணப்படுவதை உறுதிப்படுத்திய கொள்கை யாது?

    (ii) மேற்படி கொள்கையுடன் தொடர்புடைய மூன்று சட்டங்களைப் பெயரிடுக.

05. "அபிவிருத்தி" என்னும் எண்ணக்கரு காலப்போக்குடன் எவ்வாறு பரிணாமம் அடைந்ததென சுருக்கமாக விளக்குக.

06. 1944இல் இங்கிலாந்தில் அறிமுகப் படுத்தப்பட்ட பட்லர் சட்டத்தினால் அறிமுகஞ் செய்யப்பட்ட மூவகை பாடசாலைகள்(Tripartite system) முறைமையின் மூன்று உடன்பாடான விளைவுகளையும் மூன்று எதிர்மறையான விளைவுகளையும் பெயரிடுக.

07. இலங்கைக் கல்வி முறைமையில் பாகுபாடுகளைக் குறைத்து சமவாய்ப்புளை உறுதிபடுத்தக்கூடிய மூன்று புதிய உத்திகளை முன்மொழிக.

08. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பாடசாலையிலிருந்து பிள்ளைகள் இடைவிலகுவதற்கான ஐந்து காரணங்களை பட்டியல்படுத்துக.

(8 x 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. "காலனித்துவ கல்விக்கொள்கையினால் உருவாக்கப்பட்ட அசமத்துவங்களை களைந்து சகலருக்குமான கல்வி உரிமையை அங்கீகரிக்கும் வகையிலான சமூகமாற்றத்தை எற்படுத்தக்கூடிய தரிசன நோக்கினை கன்னங்கரா அறிக்கை கொண்டிருந்தது........"

- தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை– 2003 டிசம்பர் -

(i) சமகால இலங்கையர் சமூகத்தில் பிரித்தானிய காலனித்துவ கல்வி உருவாக்கிய அசமத்துவங்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ii) இலங்கையில் சமூக மாற்றத்தை உருவாக்குவதற்கு கன்னங்கராவின் கல்வி சீர்திருத்தங்கள் முன்வைத்த தரிசனநோக்கு யாது?

(07 புள்ளிகள்)

(iii) இவ்வாறு முன்வைக்கப்பட்ட தரிசனநோக்கு உண்மையில் நனவாகியதா? பொருத்தமான உதாரணங்களைக்கொண்டு ஆராய்க.

(08 புள்ளகள்)

(மொத்தம்: 20 புள்ளிகள்)

10. (i) 1972 கலைத்திட்ட சீர்திருத்தங்களில் தொழில் முன்னிலைப்பாடத்தை அறிமுகஞ் செய்தமைக்கான நோக்கங்கள் யாவை?

(05 புள்ளிகள்)

(ii) உங்களது அபிப்பிராயப்படி இப்பாடம் எந்தளவுக்கு பொருத்தமானது?

(07 புள்ளிகள்)

(iii) இது அந்தளவுக்கு வெற்றியடையவில்லை எனில் அதற்கான காரணங்கள் யாவை?

(08 புள்ளிகள்)

(மொத்தம்: 20 புள்ளிகள்)

11. (i) யப்பானிய இடைநிலைக் கல்வியின் பிரதான பண்புகளை சுருக்கமாக விபரிக்குக.

(07 புள்ளிகள்)

(ii) யப்பானிய இடைநிலைக் கல்வியிலுள்ள மூன்று எழுவினாக்கள்/ பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(iii) நீங்கள் மேலே குறிப்பிட்ட எழுவினாக்கள்/பிரச்சினைகளை இலங்கையில் இடைநிலைக்கல்விப் பிரச்சினைகளுடன் ஒப்பிட்டு ஆராய்க.

(07 புள்ளிகள்)

12. (i) கல்வியில் ஏற்பட்ட சர்வதேசரீதியான அபிவிருத்திகள் இலங்கையின் கல்வியில் செல்வாக்கு செலுத்தியுள்ள வகையினை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(ii) இலங்கையில் கல்வியை சர்வதேசமயப்படுத்தலால் ஏற்படக்கூடிய அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம்: 20 புள்ளிகள்)

13. பின்வரும் அடிப்படைகளில், தென்னாசிய நாடுகளின் கல்விப்பிரச்சினைகளை இலங்கைக் கல்விப்பிரச்சினைகளுடன் ஒப்பிடுக:

(i) கல்விக்கான பிரவேசவாய்ப்புகள். (06 புள்ளிகள்)

(ii) கல்வியில் உள்ளக வினைத்திறன் (07 புள்ளிகள்)

(iii) கல்வியில் வெளிவாரி வினைத்திறன். (07 புள்ளிகள்)

(மொத்தம் : 20 புள்ளிகள்)

14. பின்வரும் தலைப்புகளில் இரண்டினுக்கு மாத்திரம் குறிப்புகள் எழுதுக.

(i) கட்டாய கல்வி இலக்கினை அடைவதற்கு இலங்கை எதிர்நோக்கும் தடைகள்.

(ii) கல்வியை மேலும் நடைமுறைத்தன்மையும் அர்த்தமும் உடையதாக்குவதற்கு இலங்கையின் கிராமிய கல்வித் திட்டம் (ஹந்தேஸ திட்டம்) மேற்கொண்ட படிமுறைகளின் விளைதிறன்.

(iii) கல்வியையும் வேலை உலகையும் தொடர்புபடுத்த அபிவிருத்தியடைந்த நாடுகள் மேற்கொள்ளும் உத்திகள்.

(10 x 2 = 20 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)